கடவுள் துணை.

முதுமொழிக் காஞ்சி.

க - வது. சிறந்தபத்து.

1 ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை

இ-ள். கடல்சூழ்ந்த வுலகத்து மக்கட் கெல்லா மோதலினு மிக்க சிறப்புடைத்து ஆசார முடைமை யென்றவாறு.

2 காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.

இ-ள். பிறர் தன்மேற் செய்யுங் காதலினு மச்சத்து மிக்க வாற்றாற் கண்ணஞ்சப் படுதல்—எ-று.

3 மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை

இ-ள். நூல்களை யொண்மை மதியுடைமையா னறியு மறிவினு மிக்க சிறப்புடைத்து தான் கற்றதனைக் கடைப்பிடித்து நிற்றல்—எ-று.

4 வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.

இ-ள். செல்வத்தினு மிக்க சிறப்புடைத்து வாய்மை யுடைமை—எ-று.

5. இளமையிற்சிறந்தன்று மெய்பிணியின்மை.

இ-ள். இளமையினும் மிக்க சிறப்புடைத்து உடம்பு பிணியின்மை — எ-று.

6. நலனுடைமையி னாணுச்சிறந்தன்று.

இ-ள். அழகுடைமையினும் மிக்க சிறப்புடைத்து நாணுடைமை — எ-று.

7. குலனுடைமையிற் கற்புச்சிறந்தன்று.

இ-ள். நல்ல குலனுடைமையினுங் கல்வியுடைமை சிறப்புடைத்து — எ-று.

8. கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.

இ-ள். தானொன்றைக் கற்குமதனினுஞ் சிறப்புடைத்து கற்றாரை வழிபாடுசெய்தல் — எ-று

9. செற்றாரைச்செறுத்தலிற் றற்செய்கைசிறந்தன்று.

இ-ள். பகைவரைச் செறுத்தலினு மிக்கசிறப்புடைத்து தன்னைப்பெருகச்செய்தல் — எ-று.

10. முற்பெருகலிற் பிற்சிறுகாமைசிறந்தன்று.

இ-ள். செல்வ முற்காலத்துப் பெருகிப் பின்னைக் குறைதலினிற் சிறுகாமை சிறப்புடைத்து — எ-று.

உ - வது. அறிவுபத்து:



1. பேரிற்பிறந்தமை யீரத்தினறிப.

இ-ள். கடல்சூழ்ந்தவுலகத்து மக்களெல்லாருள்ளுமொரு வன பெருங்குடிப்பிறந்தமையை யவனீரமுடைமை யானேய றியக்கடவா—எ-று.

2. ஈரமுடைமை யீகையினறிப.

இ-ள். நெஞ்சினொருவனை கணணீரமுடையா னென்பதனை யவன் பிறர்க்குக்கொடுக்குங்கொடையினானே யறிவா—எ-று.

3. சோராநன்னட் புதவியினறிப.

இ-ள். ஒருவன தப்பாத கடைப்பிடிபுடைய நல்லநட்பினை யுடைய னென்ப தவனட்டார்க்குச்செய்யு முதவியினானே ய றிப—எ-று.

4. கற்றதுடைமை காட்சியினறிப.

இ-ள். ஒருவனது கல்வியை யவன்ற னறிவினானே யறி வர்—எ-று.

5. ஏற்றமுடைமை யெதிர்கொளினறிப.

இ-ள். ஒருவனாய்ந்து துணியவல்லனென்பதனை யவன் மேற்கொண்டு பாதுகாக்குங் காப்பானேயறிவர்—எ-று.

6. சிற்றிற்பிறந்தமை பெருமிதத்தினறிப.

இ-ள். சிறுமையுடைய குடியின்கட் பிறந்தானென்பனை யவன்செருக்கினானேயறிவர்—எ-று.

7. சூத்திரஞ்செய்தலிற் கள்வனாதலறிப.

இ-ள். ஒருவனையொருவன் படிறுசெய்யும் படிற்றால் கள்வனாதலறிவர்—எ-று.

8. சொற்சோர்வுடைமையி னெச்சோர்வுமறிப.

இ-ள். சொற்சோர்வுபடச் சொல்லுதலா னவனுடையவெல்லாச்சோர்வையுமறிவர்—எ-று.

9. அறிவுசோர்வுடைமையிற் பிறிதுசோர்வுமறிப.

இ-ள். ஒருவன்றன்னறிவின்கட் சோர்வுடைமையி னெல்லாஞ் சோர்வுடைய னென்பதறிவர்—எ-று.

10. சீருடையாண்மை செய்கையினறிப.

இ-ள். ஒருவன் புகழுடையவாண்வினைத்தன்மையை யவன்செய்கையானறிவர்—எ-று.

---*---

வது. பழியாப்பத்து.

---

1. யாப்பிலோரை யியல்புகுணம்பழியார்.

இ-ள். கடல்சூழ்ந்தவுலகத்து மக்களெல்லாருமொரு செய்கையின்கண்ணுறு நிலையில்லாதாரியற்கையாகியகுணத்தை யாவரும்பழியார்—எ-று.

2. மீப்பிலோரை மீக்குணம்பழியார்.

இ-ள். மேன்மைக் குணமில்லாரை மேன்மைசெய்யாமையை யாவரும்பழியார்—எ-று.

3. பெருமையுடையத னருமைபழியார்.

இ-ள். பெருமையுடையதொன்றனை முடித்துக்கொள்கையரிதென் றதனைப்பழித்து முயற்சிதவிரார்—எ-று.

4. அருமையுடையதன் பெருமை பழியார்.

இ-ள். அருமையுடைய தொன்றினை முடித்துக்கொள்ளும் பொழு தரிதென்று பழித்ததின்கணுள்ள முயற்சிபெருமையைத்தவிரார்—எ-று.

5. நிறையச்செய்யாக் குறைவினைபழியார்.

இ-ள். ஒருவினையை நிரம்பச்செய்யாதவற்கு முன்போய்க் குறைவினையை யாவரும்பழியார்—எ-று.

6. முறையிலரசர் நாட்டிருந்து பழியார்.

இ-ள். நடுவு செய்யாதவரசர் நாட்டின்கணிருந்து அவர் நடுவு செய்யாமையை யாவரும்பழியார்—எ-று.

7. செயத்தக்கநற்கேளிர் செய்யாமைபழியார்.

இ-ள். தமக்குதவிசெய்தற்குத்தக்க நல்லகேளிருதவி செய்திலரென்று பிறர்க்குச்சொல்லிப் பழியார்—எ-று.

8. அறியாத்தேசத் தாசாரம்பழியார்.

இ-ள். தானறியாத்தேசத்தின்கட்சென் றங்குள்ளாரொழுகு மொழுக்கத்தைப்பழியார்—எ-று.

9. வறியோன்வள்ளிய னன்மைபழியார்.

இ-ள். வறுமையுடையானை வண்மையுடையானல்லனென் றுபழியார்—எ-று.

10. சிறியாரொழுக்கஞ் சிறந்தோரும்பழியார்.

இ-ள். சிறுமைக்குணமுடையாருடையகீழ்மைக்குணத்தை யொழுக்கத்தான்மிக்காரும்பழியார்—எ-று.

*

௪-வது. துவ்வாப்பத்து.

1. பழியோர்செல்வம் வறுமையிற்றுவ்வாது.

இ-ள். ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்துச் செல்வர்களுள்ளும் பழியுடையோர்செல்வம் வறுமையினீங்கியொழியாது—எ-று.

2. கழிதறுகண்மை பேடியிற்றுவ்வாது.

இ-ள். இடமுங்காலமு மறியாது மிக்கதறுகண்மை பேடித்தன்மையினீங்கி யொழியாது—எ-று.

3. நாணில்வாழ்க்கை பசித்தலிற்றுவ்வாது.

இ-ள். நாணழிந்துண்டு வாழும்வாழ்க்கை பசித்தலினீங்கி யொழியாது—எ-று.

4. பேணிலீகை மாற்றலிற்றுவ்வாது.

இ-ள். விருப்பமில்லாத கொடையை நீக்குதலி னொழியாது—எ-று.

5. செய்யாமைமேற்கொள் சிதடியிற்றுவ்வாது.

இ-ள். செயப்பத்தகாதனவற்றை மேற்கொண்டுசெய்யத்தொடங்குமது டையறதன்மையி னீங்கியொழியாது—எ-று.

6. பொய்வேளாண்மை புலைமையிற் றுவ்வாது.

இ-ள். பொய்ப்பட்ட வுபசாரம் புலைமையினீங்கியொழி யாது—எ-று.

7. கொண்டுகண்மாறல் கொடுமையிற் றுவ்வாது.

இ-ள். ஒருவனையொருவ னட்டாகக்கொண்டு கண்ணோட்டத் தன்மை மாறுதல் கொடுமையினீங்கி யொழியாது—எ-று.

8. அறிவிலி துணைப்பாடு தனிமையிற் றுவ்வாது.

இ-ள். அறிவில்லா தானொருவனோடு துணைப்பாடு தனிமையி னீங்கியொழியாது—எ-று.

9. இழிவுடைமூப்புக் கதத்திற் றுவ்வாது.

இ-ள். இழிவினையுடைய மூப்பு பிறரால் வைது வெசந்து வெகுட்சியினீங்கியொழியாது—எ-று.

10. தானோரின்புறல் தனிமையிற் றுவ்வாது.

இ-ள். தானேயொருவன் னின்புறுதல் வறுமையினீங்கி யொழியாது—எ-று.

———*———

முதுமொழிக்காஞ்சி.

௫ - வது - அல்லபத்து.

1. நீரறிந்தொழுகா தாடாரமல்லள்.

இ-ள். ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்து மக்கட்கெல்லாங் கொழுநனது குணமறிந்தொழுகாதாண் மனையாளல்லள் —எ-று.

2. தாரமாணாதது வாழ்க்கையன்று.

இ-ள். மனையாளை மாட்சிமைப்படாத மனைவாழ்க்கை மனைவாழ்க்கையன்று —எ-று.

3. ஈரமல்லாதது கிளைநட்பன்று.

இ-ள். மனத்தின்கணீரமில்லாதது கிளையுமன்று நட்புமன்று —எ-று.

4. சோரக்கையன் சொன்மலையல்லன்.

இ-ள். பிறர்க்கொன்றை யுதவாத கையையுடையோன் புகழைத்தாங்கமாட்டான் —எ-று.

5. நேராநெஞ்சத்தோ னட்டோனல்லன்.

இ-ள். வேறுயுடன்படாத நெஞ்சத்தோ னட்டோனல்லன் —எ-று.

6. நேராமற்கற்றது கல்வியன்று.

இ-ள். சுறபிக்குமாசிரியனுக் கொன்றைக்கொடுத்து ஏற மது கல்வியன்று—எ-று.

7. வாழாமல்வருந்தியது வருத்தமன்று.

இ-ள். தன்னுயிர்வாழாமை வருந்தியது வருத்தமன்று-எ-று.

8. அறத்தாற்றினீயாத ஈகையன்று.

இ-ள் அறத்தினெறியினீயாத ஈகையன்று—எ-று.

9. திறத்தாற்றினோலா தநோன்பன்று.

இ-ள். தன்குலத்திற்கு நிலைமைக்குத்தக நோலாதது தவம ன்று—எ-று.

10. மறுபிறப்பறியா ததுமூப்பன்று.

இ-ள். மறுபிறப்பையறிந்த சாத்திரத்தின்வழி யொழுகாதே மூத்த மூப்பு மூப்பன்று—எ-று

---*---

முதுமொழிக்காஞ்சி.

சு - வது - இல்லைபத்து.

1. மக்கட்பேற்றிற் பெறும்பேறில்லை.

இ-ள். ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்துமக்கட்கெல்லாம் புதல்வரைப் பெறும்பேற்றிற்பெறும்பேறில்லை—எ-று. மக்களாய்ப் பிறக்கும் பிறவியிற் பெறும்பேறில்லை யெனினுமமையும்.

2. ஒப்புரவறிதலிற் றகுவுரவில்லை.

இ-ள். செய்யக்கடவன செய்கையோடொக்குந் தகுதியில்லை—எ-று.

3. வாய்ப்புடைவழக்கி னல்வழக்கில்லை.

இ-ள். மக்கட்பேறுவாய்த்த கல்விபோலுங் கல்வியினல்லதில்லை—எ-று.

4. வாயாவழக்கிற் றீவழக்கில்லை.

இ-ள். மக்கட்பேற்றின் பொருளறியக்கற்குங் கல்விபோல தீயதில்லை—எ-று.

5. இளைவதுகரத்தலிற் கொடுமையில்லை.

இ-ள். பிறர்க்குக்கொடுக்க வியலும் பொருளை யில்லையென்று கரக்குங்கரப்பிற்கொடுமையில்லை—எ-று.

6 உணர்விலனாதலிற் சாக்காடில்லை.

இ-ள் ஒருவனுக்கறிவின்மையோ டொக்குஞ் சாக்காடில்லை—எ-று.

7. நசையிற்பெரியதோர் நல்குரவில்லை.

இ-ள் ஆசையின்மிக்க தொரு வறுமையில்லை—எ-று

8 இசையிற்பெரியதோ ரெச்சமில்லை.

இ-ள் புகழுடைமையின் மிக்கது பின்பயப்பதோ ராக்க பொருளாக்கமில்லை—எ-று

9 இரத்தலி னூங்கிளிவரவில்லை

இ-ள். இரந்துயிர் வாழ்தலின் மேற்கீழ்மை யில்லை—எ-று.

10 இரப்போர்க்கீதலி னெய்துஞ் சிறப்பில்லை.

இ-ள். இரப்போர்க்குக் கொடுப்பதின்மிக்கதா யெய்து மேன்மையில்லை—எ-று.

———*———

முதுமொழிக்காஞ்சி.

எ - வது - பொய்யாப்பத்து.



1. பேரறிவினோனினிது வாழாமைபொய்.

இ-ள். ஆர்கலியாற் சூழப்பட்ட வுலகத்திலுள்ள மக்களுள் ஒருவன் பேரறிவுடையனாயினவன மதத்தாலின்புற்றொழுகாமை பொய்—எ-று.

2. பெருஞ்சீரோன்றன் வெகுளியின்மைபொய்.

இ-ள். பெருஞ்செல்வத்தைப் பெற்றானொருவன் வெகுளாமைபொய்—எ-று.

3. கள்ளுண்போன்றன் சோர்வின்மைபொய்.

இ-ள். கள்ளையுண்போனொழுக்கஞ் சோர்வின்மை பொய்—எ-று.

4. காலமறியாதோன் கையுறல்பொய்.

இ-ள். காலமறிந்து முயலாதோன் கருமமுடித்தல் பொய்—எ-று.

5. மேல்வரவறியாதோன் றற்காத்தல்பொய்.

இ-ள். எதிர்காலத்துவரு மிடையூறறியாதான் றனக்கரணொன்றுகாத்தல்பொய்—எ-று.

6. உறுவினைகாய்வோ னுயர்வேண்டலபொய்.

இ-ள். மிக்ககருமஞ்செய்கைக்கு மடிந்திருப்போன் மேன்மைய
க்கம வேண்டுதல்பொய்—எ-று.

7. சிறுமைநோனாதோன் பெருமைவேண்டல்பொய்.

இ-ள். பிறர் தனக்குச்செய்யும் பணிவினைபொறாதோன் ற
னக்குப் பெருமைவேண்டுதல் பொய்—எ-று.

8. பெருமைநோனாதோன் சிறுமைவேண்டல் பொய்.

இ-ள். பிறர்க்குத்தானரியமை பெருமை வேண்டாதான் ற
னக்குச் சிறுமைக்குணம வேண்டுதல்பொய்—எ-று.

9. பொருணசைவேட்கையோன் முறைசெயல்பொய்.

இ-ள். பொருணசையாலவரும் வேட்கையையுடையான் மு
றைசெய்தல்பொய்—எ-று.

10. வாலியனல்லாதோன் றவஞ்செய்தல்பொய்.

இ-ள். மாநத்தின்கட்டூய னல்லாதோன றவஞ்செய்தல்
பொய்—எ-று.



முதுமொழிக்காஞ்சி.

அ - வது - எளியபத்து.



1. புகழ்வெய்யோர்க்குப் புத்தேணாடெளிது.

இ-ள். ஆர்கலியாற்சூழப்பட்டவுலகத்துமக்களெல்லாருள்ளும், ஒருவர்க்குப்புகழ்விரும்பிற் கடவுளர்வாழுநாடுபெறுத லெளிது—எ-று.

2. உறழ்வெய்யோர்க் குறுசெருவெளிது.

இ-ள். பிறரொடு கலகம்விரும்புவார்க்கு மிக்கசெருவெளிது—எ-று.

3. ஈரம்வெய்யோர்க்கு நசைகொடையெளிது.

இ-ள். மநத்து வீரத்தைவிரும்பியிருப்பார்க்குப் பிறனொருவன் கேட்கககொடுத்தலெளிது—எ-று.

4. குறளைவெய்யோர்க்கு மறைவிரியெளிது.

இ-ள். குறளைச்சொல்லை விரும்புவார்க்கு ஒருவன்மறையச் செய்தோன்றனை வெளிப்படுத்திப் பிறரை யறிவித்தலெளிது—எ-று.

5. துன்பம்வெய்யோர்க் கின்பமெளிது.

இ-ள். ஒன்றனைமுயன்றுவருந் துன்பத்தைவெறாதார்க்கின்பமெய்தலெளிது—எ-று.

6. இன்பம்வெய்யோர்க்குத் துன்பமெளிது.

இ-ள். முயன்றுவருந் தன்மையாலவருமின்பத்தைத் தவிருந்(ட்)பு வாரக்குப் பொருளில்லாமையா லவருந்துன்பமெளிது—எ-று.

7. உண்டிவெய்யோர்க்கு உறுபிணியெளிது.

இ-ள். உண்டிமிகவிரும்பினார்க்கு மிகப்பிணியெளிது-எ-று.

8. பெண்டிர்வெய்யோர்க்குப் படுபழியெளிது.

இ-ள், பெண்டிரைமிகவிரும்பினார்க் குண்டாகும்பழியெளிது—எ-று.

9. பாரம்வெய்யோர்க்குப் பாத்தூணெளிது.

இ-ள். பெருமையை விரும்பினார்க்குப் பகுத்துண்டலெளிது—எ-று.

10. சார்பிலோருக் குறுகொலையெளிது.

இ-ள். நன்னட்பைச்சாராதோர்க்குப் பொருந்தியகொலைத் தொழில்செய்தல்எளிது—எ-று.

——*——

௬ - வது. நல்கூர்ந்தபத்து.

1. முறையிலரசு னாடுநல்கூர்ந்தன்று.

இ-ள். ஆகலியாற்குழப்பட அவற்கு நுல்லா மக்கட்கும் முறைமைசெய்யாவரசனுடு வறுமையுறும்—எ-று.

2 மிக்கமூத்தோனகாம நல்கூர்ந்தன்று.

இ-ள் மிக்கமுத்தான காமந்திறுமயக்குறுகாச்சி வறுமையுறும்—எ-று.

3. செற்றுடனுறைவோனைச் சேர்தனல்கூர்ந்தன்று.

இ-ள் தன்னைச் செற்றுத்தொழுகுவானைச் சென்றடைதல் வறுமையுறும—எ-று.

4. பிணிகிடந்தோன பெற்ற வின்பநல்கூர்ந்தன்று.

இ-ள் பிணிபட்டவுடம்பை யுடையானுக்கு நுகர்ச்சியின்பம் வறுமையுறும—எ-று.

5. தற்போற்றுவழிப்புலவி நல்கூர்ந்தன்று.

இ-ள் தன்மேலன்பாற் போற்றுதாரிறத்துப் புலக்கும் புலவி வறுமையுறும—எ-று.

6. மூத்தோருடையோன் மேனியணி நல்கூர்ந்தன்று.

இ-ள். மூத்த வுடம்பினையுடையார் அணியுடம்பி வறுமையுற் றும——எ-று.

7. சொல்லோர் சொல்லாட மிகச்சொல்லவு நல்கூர்ந்தன்று.

இ-ள். தன சொற்சொல்லாமல் விடத்துச் சொல்லியசொல்வ மையுறும——எ-று.

8. அகமறியோனண்ண னல்கூர்ந்தன்று.

இ-ள். மநத்தினறன் டயினறிவறியோ னை நவனைச்சே ர் நண்ணலவறுமையுறு ட——எ-று

9. உடனிலவழிச்சின நல்கூர்ந்தன்று

இ-ள். மதியாதார முன வெகுளும வெகுட்சி வறுமையுறு எ-று.

10 நட்பிலவழிச்சொல்லவு நல்கூர்ந்தன்று.

இ-ள். தன்னோடு நட்பிலாதாரமாட டொனதனைநச் சுதை வறுமையுறும——எ-று.

௧0 - வது. தண்டாப்பத்து.

1. ஓங்கல்வேண்டுவோ னுயர்மொழிதண்டான்.

இ-ள். ஆர்கலியாற்சூழப்பட்ட வுலகத்தெல்லாமக்களுள்ளு ம் உயர்வுவேண்டுவோன் பிறரொருவரையுயர்த்துச்சொல்லு மொழிக ளை மாறான்—எ-று.

2. வீங்கல்வேண்டுவோன் பல்புகழ்தண்டான்.

இ-ள். ஆக்கத்தைவேண்டுமேவா னொருவன் றனக்குப் பலபு கழ்வருஞ் செய்கை களையான்—எ-று.

3. கற்றல்வேண்டுவோன் வழிபாடுதண்டான்.

இ-ள். ஒன்றனைக்கற்றல் விரும்புவான் றன்னைக் கற் பித்தாசிரியற்குச்செய்யும் வழிபாடொழியான்—எ-று.

4. நிற்றலவேண்டுவோன் றவஞ்செயற்றண்டான்.

இ-ள். பிறப்புகெடுத்துத் தன்னை நிலைப்பிக்கவேண்டுவோ ன் றவஞ்செய்தலொழியான—எ-று.

5. வாழ்க்கைவேண்டுவோன் சூழ்ச்சிதண்டான்.

இ-ள். வாழ்தலை மேன்மேலும் விரும்பிய வொருவன்று ணைக்கொடுதொழிலை யாராய்தலொழியான்—எ-று.

[illegible] ருளவேண்டுவோன் வருத்தந் தண்டான்.

அஃ[illegible] பொருள வேண்டுகின்ற [illegible] தமையனக்கான — என்று.

7. [illegible] வேண்டுவோ[illegible] தண்டான்.

இ-ள். இ[illegible] பெரும்ப[illegible] ருவன் துன்பத்தைத் தண்டானென்று சொல்லயான — என்று.

8. துன்பம் வேண்டுவோ னின்பந் தண்டான்.

இ-ள். துன்ப[illegible] விரும்பிய வொருவ னின்பத்தை மி[illegible]மென்று சொல்லப்ப[illegible] — என்று.

9. [illegible] வேண்டுவோன் முறைசெய்தற் றண்டான்.

இ-ள். குடிச்சனங்க[illegible] விரும்பியவரசன் முறைமைப் படுத்த லொழியா[illegible] — என்று.

10. காமம் வேண்டுவோன் குறிப்புச்செய்தற் றண்டா[illegible]

காமத்தைவிரும்பிய வொருவன் குறிப்பறித[illegible] — என்று.

முதுமொழிக்காஞ்சி

முற்றிற்று.